# பகலாமுகி தேவி

## - சாந்திப்பிரியா –

( ஓம் சரவணபவா, ஏப்ரல் 2005 இதழில் வெளியான இந்த கதையின் விரிவாக்கப்பட்ட மறு பதிப்பு இது )



நல்கேடா பகலாமுகி ஆலயத்தில் உள்ள தேவியின் சிலை



மற்றொரு ஆலயத்தில் பகலாமுகி தேவியின் தோற்றம்

வழி: உஜ்ஜயினியில் இருந்து நல்கேடாவிற்கு நேரடியாக பஸ்கள், டாக்ஸிகள் செல்கின்றன. பயண நேரம் சுமார் இரண்டு மணி நேரம் . இதைத் தவிற அஸ்ஸாம், பீகார் மற்றும் நேபாளத்திலும் பகலாமுகிக்கு ஆலயம் உள்ளன என்றாலும் அவற்றின் கதைகள் வேறு மாதிரி உள்ளன.

## ஆலயச் செய்தி

மத்தியப் பிரதேசத்தில் தந்திர மந்திர சக்தியை உள்ளடக்கிய ஆலயங்கள் பல உள்ளன. பொதுவாகவே மன்னன் விக்ரமாதித்தியன் ஆண்ட இடங்களில் மந்திர தந்திர சக்திகள் அடங்கிய ஆலயங்களை அவர் நிறுவியதாக ஒரு கருத்து உண்டு. ஏன் எனில் அவர் அப்படிப்பட்ட ஆலயங்களுக்குச் சென்று பூஜைகள் செய்து வழிபடுவது வழக்கமாம்.

அதனால்தான் அவர் ஆண்டு வந்த மத்தியப் பிரதேசத்திலும் அப்படிப்பட்ட ஆலயங்கள் நிறையவே இருந்தன. அவற்றில் ஒன்றுதான் பகலாமுகி ஆலயம். உஜ்ஜயினியில் இருந்து சுமார் 90 கி.மீ தொலைவில் உள்ள நல்கேடா என்ற சிற்றூரில் நர்மதை நதியின் கரையைத் தொட்டபடி உள்ளது அந்த ஆலயம். அந்த ஆலயத்தைப் பற்றி சிறு வரலாறு அங்குள்ள ஒரு கல்வெட்டில் இருந்து தெரிய வருகின்றது. மற்றபடி ஆலயம் எப்பொழுது கட்டப்பட்டது என்ற விவரம் இல்லை.

## தேவி ஆலயத்தின் பெருமை

அந்த ஆலயத்தில் உள்ள தேவியின் சிலை 2500 ஆண்டுகளுக்கு முட்பட்டது எனவும், பூமியில் இருந்து தானாக வெளி வந்தது எனவும் கூறப்படுகின்றது. 1815 ஆம் ஆண்டில் ஆலயத்தில் உள்ள தேவியின் பிராகாரத்தைச் சுற்றி பதினாறு துாண்கள் எழுப்பப்பட்டு உள்ளதாக கல்வெட்டு செய்தி கூறுகின்றது. குறிப்பிட்ட ஏதோ ஒரு காரணத்திற்காக மந்திர தந்திர சாஸ்திரத்தின் அடிப்படையில் பதினாறு துாண்கள் எழுப்பப்பட்டு இருந்திருக்க வேண்டும் என ஒரு சாஸ்திர பண்டிதர் கூறினார். புராணச் செய்திகளின் அடிப்படையில் மகாபாரதப் போரின் பொழுது குருஷ்ஷேத்திரத்தில் நடைபெற்ற யுத்தத்தில் கௌரவர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தர்மர் பகலாமுகி தேவியை இந்த இடத்தில் வந்து இங்கு வழிபட்டார் எனக் கூறுகின்றனர்.

## தேவியின் ஸ்வரூபம்

தேவிக்கு மூன்று கண்கள் உள்ளன. அந்த சிலை மூன்று தலைகளைக் கொண்டதாகவும் உள்ளது. ஆகவே மும்மூர்த்திகளை உள்ளடக்கிய முக்கண்ணராகிய சிவபெருமானின் அவதாரமே அந்த சிலை என்றும் அர்தநாரீஸ்வரரைக் குறிக்கும் சிலையே அது எனவும் கூறுகின்றனர். அவள் மேனி பொன்னிரமானது, அவளுக்கு பிடித்த வண்ணம் மஞ்சள் நிறம், அவளே மந்திர தந்திர சக்திகளின் தெய்வம், மஞ்சள் நிற தாமரைப் பூக்களின் மஞ்சத்தில் அமர்ந்து கொண்டு இருப்பவள் என அவளுடைய ரூபத்தை வர்ணிக்கின்றனர். ஆனால் நல்கேடாவில் உள்ள சிலையோ கழுத்துவரைதான் உள்ளது. பகலாமுகி தேவியை வணங்கி ஆராதித்தால் எதிரிகள் அடங்குவர், தடைகள் விலகும், பில்லி சுனியங்களினால் ஏற்படும் அபாயங்கள் விலகும் என நம்புவதால் பலரும் இங்கு வந்து வேண்டுதல்கள் செய்கின்றனர்.

# தேவியின் கதை

சத்யுகத்தில் ஒரு முறை பிரளயம் ஏற்பட்டு உலகமே அழிந்து விடும் நிலைக்குச் சென்று விட்டது. அதன் கோர தாண்டவத்தைத் தாங்க முடியாமல் போன விஷ்ணு பகவான் சௌராஷ்டிராவில் இருந்த ஒரு தனிமையான இடத்தில் சென்று தவத்தில் அமர்ந்து கொண்டார். அதன் விளைவாக அவருடைய நாபியில் இருந்து வெளிவந்த ஜோதியும், ஆகாயத்தில் இருந்த நட்சத்திரங்களின் ஒளியும் ஒன்று சேர, அந்த ஒளி வெள்ளத்தில் தோன்றினாள் பகலாமுகி தேவி. அது செவ்வாய் கிழமை,சதுர்தசியில் அர்த ராத்தரி நேரம். மகா விஷ்ணுவின் தவத்தை மெச்சி இயற்கையின் சீற்றத்தை அடக்கி உலகை அழிவில் இருந்து காப்பாற்றினாள். ஆதன் பின் அவள் பூமியில் சென்று மறைந்து கொண்டு தற்பொழுது ஆலயம் உள்ள நர்மதை நதிக்கரையில் நல்கேடாவில் ஸ்வயம்புவாக எழுந்தருளினாலாம்.